**ஜூலை – 27**

# TNPSC துளிகள்

- புது தில்லியில் போஷான் அபியான் திட்டத்தின் கீழ் இந்தியாவின் ஊட்டச்சத்து சவால்களுக்கான தேசிய ஆணையத்தின் 2வது சந்திப்பு மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
    - இக்கூட்டம் நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜுவ் குமார் தலைமையில் நடைபெற்றது.
- ஏற்கெனவே மேன்புக்கர் பரிசு வென்ற இலங்கையில் பிறந்த கனடா நாட்டு எழுத்தாளரான மைக்கேல் ஒன்டாட்ஜி 'வார்லைட்' (War light) என்ற அவரது சமீபத்திய நாவலுக்காக மேன் புக்கர் பட்டியலில் இடம் பெற்றுள்ளார். இந்நாவல் இரண்டாம் உலகப் போருக்குப்பின் இலண்டனில் இருந்த இரண்டு ஆதரவற்றவர்களைப் பற்றிய கதை ஆகும்.
    - 1992-ல் மேன்புக்கர் பரிசு பெற்ற ஒன்டாட்ஜியின் புத்தகமான 'தி இங்கிலீஷ் பேஷண்ட்' (ஆங்கில நோயாளி) என்ற புத்தகத்திற்கு 'மேன் புக்கர் பரிசின்' 50-வது ஆண்டை குறிக்கும் விதமாக சமீபத்தில் கோல்டன் மேன் புக் விருது வழங்கப்பட்டது.
- சுவச் பாரத் அபியான் திட்டத்தின் கீழ், கடந்த இரண்டு மாதத்தில் இரண்டு இலட்சம் கழிப்பறைகளுக்கு மேல் கட்டப்பட்டுள்ளன.
    - இதன் மூலம் சிதமார்கி மாவட்டம் பீகார் மாநிலத்தில் முதலாவது திறந்த வெளிக் கழிப்பறையில்லா மாவட்டம் ஆகும் (Open Defecation Free). இந்தியாவில் சிதமார்கி மாவட்டம் 416-வது திறந்த வெளி கழிப்பறையில்லா மாவட்டமாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டின் வனக் கொள்கை

- தமிழக முதலமைச்சர் எடப்பாடி K.பழனிச்சாமி மாநிலத்தின் வனக் கொள்கையினை வெளியிட்டுள்ளார்.
- வன (பாதுகாப்பு) சட்டம், 1980-ஆல் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காக தற்போது உள்ள வனப்பரப்பினை பாதுகாத்திட வேண்டி கட்டாயமாக செயல்படுத்தப்பட உள்ளன.
- மேலும் மாநிலத்தில் உள்ள சதுப்பு நிலக்காடுகளை கடலோரப் பகுதிகளில் உயிரி-கேடயமாக வனத்துறை மேம்படுத்த உள்ளது.
- இக்கொள்கை 2025-ல் வனம் மற்றும் மரங்களின் பரப்பினை குறைந்த அளவு 30 சதவீதம் அளவிற்கு உயர்த்துவதற்கான வழிமுறைகளையும் ஆராய்கின்றன. மேலும் கிராம வனக் குழுக்களில் (Village forest Committees - VFC) பெண்களின் பங்களிப்பினையும் இது மேம்படுத்தும்.
- தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் 30.92 சதவீதம் உள்ளன. மேலும் 15 வன விலங்குகள் சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 15 பறவைகள் சரணாலயங்கள், 3 உயிர்க் கோள காப்பகங்கள், 4 புலிக் காப்பகங்கள் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ளன.

# தேசியச் செய்திகள்

## ஹைட்ரோகார்பன் வரையறை - திருத்தம்

- பெட்ரோலியத்தின் வரையறையில் ஷேல் வாயுவினை சேர்ப்பதற்காக மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை வாயு விதிகள், 1959-னை மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் திருத்தி அமைத்துள்ளது.
- ஏற்கனவே இயங்கி வரும் தொகுதிகளில் உள்ள வளங்களை ஆய்வு செய்யவும் அவ்வளங்களை உருவாக்கிடவும் தனியார் நிறுவனங்களுக்கு இம்மாற்றம் அனுமதி அளிக்கும்.
- முன்பு ஷேல் வாயுவை சேர்க்கப்படாத வரையறையானது மரபுமுறை எண்ணெய் மற்றும் வாயு (அ) நிலக்கரி படுகையிலிருந்து எடுக்கப்படும் மீத்தேன் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களால் அத்துறைகளில் ஏற்படும் விதிமீறல்களைத் தடுத்தது.
- ஷேலின் மேல்தகடு மற்றும் அதன் எளிதில் பிளக்கத்தகு இயல்புக்காக மற்ற களிமப்பாறைகளிலிருந்து சிறப்பாக வகைபடுத்தப்படுகிறது.
- ஷேல் பாறைகளின் உருவாக்கத்தின் போது அதில் அகப்பட்டு மீட்டெடுக்கப்படும் வாயு ஷேல் வாயு ஆகும்.
- ஷேல் வாயு இயற்கை வாயுவை விட மலிவானதாகும். மேலும் இது 50 சதவீதத்திற்கும் குறைவான $Co_2$ வாயுவினை வெளியிடுவதால் மின்சாரம் தயாரிப்பதற்கு சிறந்த ஆதாரமாக உள்ளது.
- இந்தியாவில் ஆற்றல் வளமிக்க ஷேல் வாயு உள்ள இடங்கள்
    - காம்பே
    - கோண்டுவானா
    - கிருஷ்ணா-கோதாவரி மற்றும்
    - காவிரி படுகைகள்

## இன்வெஸ்ட் இந்தியா மற்றும் பிஸினஸ் பிரான்சு - MOU

- இந்தியா மற்றும் பிரான்சு இடையேயான தொடக்கநிலை நிறுவனங்களின் முதலீட்டு வசதிகள் மற்றும் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memorandum of Understanding - MoU) இன்வெஸ்ட் இந்தியா மற்றும் பிஸினஸ் பிரான்சு ஆகிய நிறுவனங்கள் கையெழுத்திட்டுள்ளன.
- இன்வெஸ்ட் இந்தியா மத்திய அரசின் அதிகாரப்பூர்வ முதலீட்டு மேம்பாடு மற்றும் எளிதாக்குதல் நிறுவனம் ஆகும்.
- இது வர்த்தக மற்றும் தொழிற்சாலை அமைச்சகத்தின் தொழிற்துறைக் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் (Department of Industrial Policy and Promotion - DIPP) கீழ் எடுக்கப்பட்ட இலாப நோக்கமில்லா துணிகர முயற்சியாகும்.
- பிஸினஸ் பிரான்சு, பொருளாதார விவகாரங்கள் அமைச்சர், நிதி அமைச்சர் மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் சர்வதேச மேம்பாட்டு அமைச்சர் ஆகியோர்

மேற்பார்வையில் பிரான்சு அரசால் நிர்வகிக்கப்படும் அமைப்பாகும்.

## பிரதம மந்திரியின் மூன்று நாடுகளின் சுற்றுப் பயணம் (ஆப்பிரிக்கா)

- பிரதமர் நரேந்திர மோடி, ஆப்பிரிக்க நாடுகளான ருவாண்டா, உகாண்டா மற்றும் தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட மூன்று நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.
- ருவாண்டாவிற்கு விஜயம் செய்த முதல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆவார்.
- பாதுகாப்பு, வணிகம், வேளாண்மை, தோல் மற்றும் அது தொடர்பான உற்பத்திப் பொருட்கள் மற்றும் பால்பொருட்கள் ஆகிய துறைகளுக்கான எட்டு ஒப்பந்தங்களில் இந்தியா மற்றும் ருவாண்டா கையெழுத்திட்டுள்ளன.




- ருவாண்டா அரசின் கிரிங்கா திட்டத்தின் ஒரு பகுதியாக ரிவேரு கிராமப்பகுதி மக்களுக்கு 200 பசுமாடுகளை பிரதமர் நரேந்திர மோடி பரிசாக வழங்கினார்.
- பாதுகாப்பு ஒத்துழைப்பு, அரசு முறை மற்றும் அலுவல் சார்ந்த கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கான விசா விலக்கு, பண்பாடு பரிமாற்ற திட்டம் மற்றும் மூலப்பொருள் சோதனை ஆய்வுக்கூடம் ஆகியவற்றிற்கான நான்கு ஒப்பந்தங்களில் இந்தியா மற்றும் உகாண்டா கையெழுத்திட்டுள்ளன.
- கம்பாலாவில் உள்ள உகாண்டா புற்றுநோய் சிகிச்சை நிறுவனத்திற்கு புற்றுநோய் சிகிச்சை எந்திரத்தினை பரிசளிக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## மனிதனால் உருவாக்கப்பட்ட உலகின் வேகமான சுழலி

- குவாண்டம் விசையியல் பற்றி அறிய உதவும் உலகின் அதிவேக சுழலியினை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- ❖ இச்சுழலி நிமிடத்திற்கு 60 பில்லியன் சுழற்சிகளுக்கும் மேலான சுழற்சி வேகத்தில் சுழலும். இது மனிதனால் உருவாக்கப்பட்ட உலகின் அதிவேக சுழலி ஆகும்.





- ❖ இது பல்துளையிடும் இயந்திரத்தை விட 1,00,000 மடங்கு அதிக வேகம் கொண்டதாகும்.
- ❖ அதிவேக சுழலியினை உருவாக்குவதற்காக அறிவியலாளர்கள் சிலிக்காவினால் உருவாக்கப்பட்ட நானோ அளவிலான டம்பெல்லினை செயற்கையாக உருவாக்கி லேசரினை பயன்படுத்தி அதிக வெற்றிடத்தில் மிதக்க வைத்துள்ளனர்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பூமியின் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினம் (Earth overshoot day)

- ❖ 2018-ன் பூமியின் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினம் ஆகஸ்ட் 1 அன்று ஏற்பட உள்ளது. 1970களில் சுற்றுச்சூழல் எல்லை மீறல் தொடங்கியதிலிருந்து இந்த தினம் சற்று முன்பே நிகழ உள்ளது.
- ❖ உலகத் தட பிணையம் (Global Footprint Network) மற்றும் இயற்கைக்கான உலக அளவிலான நிதி (World Wide Fund - WWF) ஆகியவற்றால் இது கணக்கிடப்பட்டுள்ளது.



- இயற்கையின் மீதான மனிதனின் வருடாந்திர தேவை குறிப்பிட்ட வருடத்தில் பூமியால் மறுஉற்பத்தி செய்யும் திறனை மீறும் தினம் இத்தினமாகும்.
- 2018-ல் மொத்த வருடத்திற்கான இயற்கையின் வளங்கள் மொத்தமும் வெறும் 8 மாதக் காலத்திலேயே உபயோகப் படுத்தப்பட்டுவிட்டன.
- அதாவது மனித இனம் தற்பொழுது பூமியின் சுற்றுச்சூழலினால் மறுஉற்பத்தி செய்யும் திறனை விட 1.7 மடங்கு வேகத்தில் இயற்கையை பயன்படுத்துகிறது.
- இந்த வருடம் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினம் கடந்த வருட தினத்தை விட இரண்டு நாட்கள் முன்பாகவே வருகிறது. ஆகஸ்ட் 1-க்கு பிறகு ஒவ்வொரு தினமும் பூமியின் இயற்கை வளங்களின் மீதான சுரண்டலாகவே கருதப்படும்.

## $CO_2$ அதிகரிப்பினால் மீன்களின் மோப்ப சக்தி குறைவு

- சமீபத்திய ஆராய்வின் படி, கார்பன் வெளியீட்டின் அதிகரிப்பானது மீன்கள் வாழும் தண்ணீரை அமிலத்தன்மை கொண்டதாக மாற்றுவதால் மீன்கள் தமது மோப்பசக்தியினை இழந்து வருகின்றன.
- கடல்நீரினால் உறிஞ்சப்படும் $CO_2$ கார்போனிக் அமிலத்தினை உருவாக்குகிறது.
- 1800களிலிருந்து கடலில் உள்ள $CO_2$ன் அளவு 43 சதவீதம் உயர்ந்துள்ளது. இது இந்நூற்றாண்டின் இறுதியில் தற்போதுள்ள அளவை விட இரண்டு மடங்கிற்கும் மேல் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- கடலில் உள்ள அமிலத்தன்மை காரணத்தினால், மீன்கள் தமது மோப்ப சக்தியின் ஒரு பகுதியினை இழந்து, வாழ்வதற்கே கடினமான நிலையினை ஏற்படுத்திக் கொள்ளும்.

# மாநிலச் செய்திகள்

## பசுமை மகாநதித் திட்டம்

- ஒடிசா மாநில அரசானது 'பசுமை மகாநதித் திட்டத்தின் கீழ்' மகாநதி ஆறு மற்றும் அவற்றின் துணையாறுகள் ஆகியவற்றின் நெடுகிலும் 2 கோடி மரக்கன்றுகளை நடும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தை அம்மாநிலத்தின் காடுகள், தோட்டக் கலை மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்கு வளர்ச்சி ஆகிய துறைகள் இணைந்து செயல்படுத்துகிறது.
- இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆற்றின் ஓரங்களில் மண் அரிப்பைத் தடுத்தல் மற்றும் நிலத்தடி நீர்வளத்தைப் புதுப்பித்தல் ஆகும்.
- மகாநதி ஆறு சத்தீஸ்கர் மாநிலத்தில் மேட்டு நிலத்தில் தொடங்கி ஒடைகளின் வழியே பாய்ந்து வங்காள விரிகுடாவில் சென்று கலக்கிறது.
- மகாநதி ஆற்றின் இடப்பக்க துணையாறுகள்: சிவநாத், மாண்ட், இப், ஹெஸ்டியோ ஆகும். இவற்றின் வலப்பக்க துணையாறுகள்: ஓங், பாரி ஆறு, ஜோங்க் மற்றும் டெலின் ஆகும்.

# முக்கிய தினங்கள்

## கார்கில் விஜய் திவாஸ் - 26 ஜூலை

- இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே 1999ஆம் ஆண்டு நடைபெற்ற கார்கில் போரின் போது வீரமரணமடைந்த இந்திய இராணுவ வீரர்களை கௌரவிக்கும் விதமாகவும் 'ஆப்ரேஷன் விஜய்' யின் வெற்றியை நினைவுகூறும் விதமாகவும் இந்தியா முழுவதும் கார்கில் விஜய் திவாஸின் 19வது நினைவு ஆண்டு கொண்டாடப்பட்டது.




- ஜம்மு காஷ்மீரின் டிராஸ் போர் நினைவிடத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 24 முதல் ஜூலை 26 வரை 3 நாட்களுக்கு கார்கில் விஜய் திவாஸ் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- கார்கில் போர் ஜம்மு காஷ்மீரின் கார்கில் மாவட்டத்தில் 1999ஆம் ஆண்டு மே முதல் ஜூலை மாதம் வரை நடைபெற்றது.

- - - - - - - - - - - - - - -